வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் மலர்விழி

தேதி 15.3.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, பிஜேபி ஆதரவு அலை வீசி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

பிரதமர் இன்று, கன்னியாகுமரியிலும், கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டத்திலும், பொதுக் கூட்டங்களில் உரையாற்றினார்.

வரவிருக்கும் மக்களவை தேர்தலுக்கான தேதிகளை, தேர்தல் ஆணையம் நாளை அறிவிக்க உள்ளது.

புதுச்சேரி அரசின் சுகாதாரத் துறையில் செவிலியர் அதிகாரி பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 35 பேருக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று, பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

*மோடி-பிரச்சாரம்*

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பிஜேபி ஆதரவு அலை வீசி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். கன்னியாகுமரி அகஸ்தீஸ்வரத்தில் இன்று நடைபெற்ற பிஜேபி பொதுக் கூட்டத்தில் அவர்

பேசுகையில்,1991-ஆம் ஆண்டு கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை, தாம் மேற்கொண்ட யாத்திரையை நினைவு கூர்ந்தார். தமிழகத்தின் நினைவுச் சின்னமாகவே நாடாளுமன்றத்தில் செங்கோல் நிறுவப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சியில், மக்கள் நம்பிக்கை வைத்துள்ள நிலையில், எதிர்கட்சிகள், ஊழல் மற்றும் பிரிவினைவாத அரசியலுக்கே முக்கியத் துவம் அளிப்பதாகவும், இண்டி கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு மக்கள் நலனில் ஒருபோதும் அக்கறை இல்லை என்றும், பிரதமர் கூறினார். எதிர்கட்சிகளின் முந்தைய ஆட்சியில் ஊழல்களால் வளர்ச்சி எந்த அளவிற்கு தடைப்பட்டது என்பதையும் அவர் தமது உரையில் பட்டியல் இட்டுக் காட்டினார். பிஜேபி அரசு 130 கோடி ரூபாய் மதிப்புள்ள உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களை தமிழகத்தில் அமல்படுத்தி இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் ரயில்வே துறைக்கு 800 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட நிலையில் தற்போது இது 6 ஆயிரத்து 300 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார். தமிழக மீனவர் பிரச்சனையில் மத்திய அரசு பலமுறை தலையிட்டு இலங்கை அரசுடன் பேசி, இலங்கை சிறையில் இருந்து மீனவர்களை விடுவித்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக திருவனந்தபுரத்தில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் கன்னியாகுமரி வந்த பிரதமர், பொதுக் கூட்டம் முடிந்த உடன் மீண்டும் திருவனந்தபுரம் புறப்பட்டு சென்றார். கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டத்தில், மக்களவை தேர்தலுக்கான பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு 1 லட்சத்திற்கும் மேற்பட்ட தொண்டர்களிடையே உரையாற்றினார். திறமையற்ற ஊழல் கட்சிகளின் ஆட்சியில் கேரள மக்கள் பல துன்பங்களை அனுபவித்து இருப்பதாகவும் இம்முறை கேரளத்தில் இருந்து பல தொகுதிகளில் பிஜேபி வெற்றி பெறும் என்றும் அவர் கூறினார். தொடர்ந்து பிரதமர் தெலங்கானாவிற்கு புறப்பட்டுச் சென்றார். தெலங்கானா மாநிலம் மல்காஜ்கிரி தொகுதியில் இன்று மாலை அவர், சாலை பவணி நடத்துகிறார். மிர்யாலகுடா-வில் இருந்து, ஐதராபாத் அருகே உள்ள மல்காஜ்கிரி சவ்ராஸ்தா வரை, சுமார் 5 கிலோமீட்டர் தொலைவிற்கு சாலை பவணி நடைபெறும். இதை ஒட்டி அப்பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று இரவு, ஐதராபாத் ராஜ்பவனில் தங்குகிறார். நாளை காலை அவர் நாகர் கர்னூல் சென்று பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகிறார். நாளை மறுநாள் ஆந்திரமாநிலம் சிலக்கலூரி பேட்டாவில் தேசிய

ஜனநாயக கூட்டணியின் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பிரதமர் உரையாற்றுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பூட்டான்*

5 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள பூட்டான் பிரதமர் திரு ஷெரிங் டோப்கே, இன்று புதுடெல்லி குடியரசு தலைவர் மாளிகையில், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவை சந்தித்துப் பேசினார். பூட்டான் உடனான பன்முக உறவுகளை இந்தியா ஆழமாக மதிப்பதாகவும், பூட்டான் மக்கள் எண்ணங்கள் மற்றும் முன்னுரிமைகளுக்கு ஏற்றபடி உறவுகள் தொடரும் என்றும் குடியரசு தலைவர் கூறினார். இந்தியாவிற்கும் பூட்டானுக்கும் இடையே வர்த்தகம், முதலீடு, எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பரஸ்பர நம்பிக்கை அடிப்படையிலான நெருங்கிய உறவு நிலவி வருவதையும் 2 நாடுகளுக்கும் இடையில், இணைப்பு பாலமாக, பௌத்த பாரம்பரியம் திகழ்வதையும் குடியரசு தலைவர் சுட்டிக் காட்டினார்.

*ஆன்மிகம்*

வசுதேவ குடும்பகம் என்னும் இந்தியாவின் லட்சியத்தை வெளிப்படுத்தும் வகையில், மத்திய கலாச்சார அமைச்சகம் மற்றும் ஸ்ரீராம்சந்ரா மிஷன் உள்ளிட்ட அமைப்புகளின் கூட்டு ஏற்பாட்டில், ஐதராபாத்தில் நேற்று தொடங்கிய, உலக ஆன்மிக மகோத்சவத்தில்,

இன்று மாலை, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கலந்து கொள்கிறார். நாளை இதன் நிறைவு விழாவில், குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் பங்கேற்கிறார்.

தேர்தல் தேதி

வரவிருக்கும் மக்களவை தேர்தலுக்கான தேதிகளை, தேர்தல் ஆணையம் நாளை அறிவிக்க உள்ளது. புதுடெல்லி விக்யான் பவனில் நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற உள்ள தேர்தல் ஆணையத்தின் செய்தியாளர் கூட்டத்தில், தேர்தல் தேதிகள் பற்றிய அறிவிப்பு வெளியிடப்படும். மக்களவை தேர்தலுக்கான தேதிகளுடன் சில மாநிலங்களின் சட்டப் பேரவை தேர்தலுக்கான தேதிகளையும் தேர்தல் ஆணையம் நாளை அறிவிக்க உள்ளது. தேர்தல் தேதிகளை அறிவிப்பதற்கான செய்தியாளர் கூட்டம், தேர்தல் ஆணையத்தின் சமூகப் பக்கங்களிலும் நேரடியாக இடம் ஒளிபரப்பாக உள்ளது. வரவிருக்கும் மக்களவை தேர்தலில் பிஜேபி இதுவரை 267 தொகுதிகளுக்கான வேட்பாளர்களையும், காங்கிரஸ், 82 தொகுதிகளுக்கான வேட்பாளர்களையும் ஏற்கனவே அறிவித்துள்ளன. திரிணமுல் காங்கிரஸ், ஆம் ஆத்மி மற்றும் இடதுசாரி கட்சிகள் சார்பிலும், பல்வேறு தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப் பட்டுள்ளனர்.நடப்பு

மக்களவையின் பதவிக் காலம் வரும் ஜுன் 16-ஆம் தேதியுடன் முடிவடைவதும் குறிப்பிடத் தக்கது.

*சுகாதாரம்-நியமனம்*

புதுச்சேரி அரசின் சுகாதாரத் துறையில் செவிலியர் அதிகாரி பணியிடங்களுக்கு, மதிப்பெண் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 147 பேரில் முதல் கட்டமாக 92 பேருக்கு, கடந்த 3-ஆம் தேதி பணி நியமன ஆணை வழங்கப்பட்ட நிலையில், இன்று மேலும் 35 பேருக்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி பணி நியமன ஆணைகளை வழங்கினார். சுகாதாரத் துறையில் யோகா பயிற்சியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 32 பேருக்கும் பணி நியமன ஆணைகளை அவர் வழங்கினார்.

முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர்கள் திரு லட்சுமி நாராயணன்- திரு ஜெயக்குமார், அரசுக் கொறடா திரு ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு கல்யாண சுந்தரம், சுகாதாரத் துறைச் செயலர் திருமதி ஏ முத்தம்மா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

*புள்ளி விவரம்-நியமனம்*

புதுச்சேரி அரசின் பொருளாதாரம் மற்றும் புள்ளி விவரத் துறையில் கள மேற்பார்வையாளர் பணியிடங்களுக்கு போட்டித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 17 பேருக்கு, சென்ற மாதம் பணிநியமன ஆணை

வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, காத்திருப்போர் பட்டியலில் இருந்து தகுதியான மேலும் நால்வருக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், பொருளாதாரம் மற்றும் புள்ளி விவரத் துறையின் இயக்குநர் திரு பக்கிரிசாமி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

*ரங்கசாமி-கடிதம்*

கோடியக் கரை அருகே இன்று அதிகாலை மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினரால் படகுடன் பிடித்துச் செல்லப்பட்ட, 12 காரைக்கால் மீனவர்கள் மற்றும் 3 தமிழக மீனவர்களை படகுடன் மீட்க நடவடிக்கை எடுக்க கோரி புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதி உள்ளார். பிடித்துச் செல்லப்பட்ட மீனவர்களின் பெயர் விவரங்கள் மற்றும் மீன்பிடி படகின் பதிவு எண் விவரங்களையும் கடிதத்தில் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

*இழப்பீடு*

மத்திய அரசின் இ-ஷ்ரம் இணைய தளத்தில் பதிவு செய்துள்ள, புதுச்சேரியை சேர்ந்த அமைப்பு சாரா தொழிலாளர்கள், விபத்தினால்

ஊனம் அல்லது மரணம் அடைந்திருந்தால், இழப்பீடு பெற முடியும் என்பதால், இழப்பீடு கோரும் விண்ணப்பதாரர்கள் இதற்கான ஆவணங்களை, அமைப்பு சாரா தொழிலாளர் நலச் சங்க அலுவலகத்தில் நேரில் வந்து சமர்ப்பிக்கலாம் என்று தொழிலாளர் துறை அறிவித்துள்ளது.

*இளைஞர் ஓட்டு*

முதல் முறையாக வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள இளைஞர்கள் அனைவரும், வரவிருக்கும் மக்களவை தேர்தலில் வாக்களிப்பதை உறுதிப்படுத்தும் வகையில், நாட்டிற்காக என் முதல் ஓட்டு என்னும் பிரச்சார இயக்கத்தை தேர்தல் ஆணையம் நடத்தி வருகிறது. இது தொடர்பாக புதுச்சேரியில் இளம் வாக்காளர்களை நாம் சந்தித்து கருத்துக்களை சேகரித்தோம். கல்லூரி மாணவி பிரவீணா நம்மிடம் பேசுகையில்......

(வாய்ஸ்- பிரவீணா)

அனைவரும் நேர்மையாக வாக்களிக்க வேண்டிய அவசியம் குறித்து கல்லூரி மாணவி அனுஷா கூறுகையில் ........

(வாய்ஸ்- அனுஷா)

*நிர்மலா*

இந்தியாவில் முதலீடு செய்வதற்கான நேரடி அன்னிய முதலீட்டாளர்களின் ஆர்வம் தற்போது உச்சத்தில் இருப்பதாகவும், இது

இன்றும் வளரும் என்றே கணிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறி உள்ளார். தனியார் செய்தி அலைவரிசை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாடு ஒன்றில், அவர் பேசுகையில், சீர்திருத்தங்கள் கடைகோடி நிலை வரை எட்டுவதை, மத்திய-மாநில அரசுகளும், உள்ளாட்சி அமைப்புகளும் இணைந்து உறுதிப்படுத்த வேண்டும் என்றார். வீட்டு அளவிலான சேமிப்பையும் நுகர்வோர் செலவினங்களையும் அதிகரிக்க அரசு பல்வேறு திட்டங்களைப் பயன்படுத்தி வருவதாகவும், அடிப்படை வசதிகளை அரசு மேம்படுத்தி வருவதால், மக்களின் உரிமைகள் தானாகவே பாதுகாக்கப் படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

கேள்வி ஒன்றுக்கு அவர் பதில் அளிக்கையில் தேர்தல் பத்திரங்கள் திட்டத்தில் சில குறைகள் இருக்கலாம் என்றாலும் முந்தைய நடைமுறைகளை விட இது நல்ல திட்டம் தான் என்றும் புதிய சட்டம் வரும்போது, இத்திட்டத்தில் இருந்து கற்ற பாடங்களை பயன்படுத்திக் கொள்ளுதல் அவசியம் என்றும் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, அரசியல் நிர்பந்தங்களுக்கு அப்பாற்பட்டு, பல சீர்திருத்தங்களை தொடர்ந்து அமல்படுத்தி வரும் நிலையில், எதிர்கட்சிகள் ஓட்டுக்காக, சாத்தியமில்லா

வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்குவதாக திருமதி நிர்மலா சீதாராமன் குற்றம் சாட்டினார்.

வடக்கு-தெற்கு பாகுபாடு என்பது, மத்திய அரசை குறை சொல்வதற்கான சில மாநில அரசுகளின் அரசியல் தந்திரம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

*ராஜ்நாத்*

பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று புதுடெல்லியில், புதிதாக கட்டப்பட்டுள்ள நவ்சேனா பவன் கட்டிடத்தை திறந்து வைத்தார். முப்படைகளின் தலைமை தளபதி ஜென்ரல் அனில் சவுகான், கடற்படைத் தலைவர் அட்மிரல் ஹரிக்குமார், டிஆர்டிஓ தலைவர் டாக்டர் சமீர் காமத், மற்றும் முக்கிய பிரமுகர்கள், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்திய கடற்படையின் நிர்வாக மற்றும் செயல்பாட்டுத் தேவைகளுக்கான நவ்சேனா பவன் கட்டிடம், அதிநவீன வசதிகளுடன், டெல்லி கண்டோன்மெண்ட் பகுதியில் கட்டப்பட்டுள்ளது.

*பிரசார் பாரதி*

பிரசார் பாரதி தலைவர் மற்றும் இதர உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான குழுவின் கூட்டத்தை இன்று குடியரசு துணைத் தலைவர், தலைமை ஏற்று நடத்தினார். புதுடெல்லியில் குடியரசு துணைத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரெஸ் கவுன்சில்

தலைவர் நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறைச் செயலர் திரு சஞ்சய் ஜாஜு ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, பிஜேபி ஆதரவு அலை வீசி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

பிரதமர் இன்று, கன்னியாகுமரியிலும், கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டத்திலும், பொதுக் கூட்டங்களில் உரையாற்றினார்.

வரவிருக்கும் மக்களவை தேர்தலுக்கான தேதிகளை, தேர்தல் ஆணையம் நாளை அறிவிக்க உள்ளது.

புதுச்சேரி அரசின் சுகாதாரத் துறையில் செவிலியர் அதிகாரி பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 35 பேருக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று, பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 15.3.2024/Script/

------------------------------------